பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 03 செவ்வாய்க்கிழமை 17.06.2025 | அதிர்வு 318

ஒரு வாக்கு வித்தியாசத்தில்


## கரவெட்டி சபை தமிழரசு வசம்!

யாழ். வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் (கரவெட்டி) தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த குமாரசாமி சுரேந்திரன் 03


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழரசுத் தலைமையினது வழிகாட்டல்களை மீறோம்!



## தீவக உள்ளூராட்சி உறுப்பினர்கள் நேரில் ஒன்று கூடி உறுதியுரைப்பு



“உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை வழங்கும் வழிகாட்டல்களை மீறமாட்டோம்.”

- இவ்வாறு அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தல்களில் தீவுப் பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உறுப்பினர்கள் இன்று காலை கட்சியின் தலைமையை நேரில் சந்தித்து உறுதி தெரிவித்தனர். 03

# பருத்தித்துறை நகர சபையை கைப்பற்றியது ‘சைக்கிள்’ அணி

## நகர பிதாவாக டக்ளஸ் போல் தெரிவு





(எஸ்.ரகுதீஸ், எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறை நகர சபையின் புதிய நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தெரிவானார்.

பருத்தித்துறை நகர சபையின் நகர பிதா மற்றும் துணை நகர பிதா ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று காலை பருத்தித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 5 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 4 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 2 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு (அர்ச்சுனா அணி) ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின. 03



# பருத்தித்துறை பிரதேச சபை தமிழரசு வசம்! தவிசாளராக யுகதீஸ் ஏகமனதாகத் தெரிவு!!

(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உதயகுமார் யுகதீஸ் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவானார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று முற்பகல் 11.30 பருத்தித்துறை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

20 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 9 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு 2 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவுக்கான அமர்வில், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட உதயகுமார் யுகதீஸ் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவானார்.

அதையடுத்து உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட கனகரத்தினம் ஸ்ரீகாந்தரூபனும் அந்தப் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவானார்.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பருத்தித்துறை நகர சபையை...

இன்றைய நகர பிதா தெரிவுக்கான பகிரங்க வாக்கெடுப்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வின்சன் டீ போல் டக்ளஸ் போலுக்கு 7 பேரும் (சைக்கிள் 5 + சங்கு 2), இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தி.சந்திரசேகரனுக்கு 4 பேரும் ஆதரவு வழங்கினர்.

வாக்கெடுப்பின்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வெளிநடப்பு செய்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் இரண்டு உறுப்பினர்கள் மற்றும் அர்ச்சுனா அணி சுயேச்சைக் குழுவின் ஓர் உறுப்பினர் ஆகியோர் நடுநிலை வகித்தனர்.

அதேவேளை, துணை நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த தேவராசேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.







## தமிழரசுத் தலைமையினது...

யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் இன்று காலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ். குலநாயகம் மற்றும் நிர்வாகப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எஸ். சுகிர்தன் ஆகியோரை தீவுப் பகுதியில் இருந்து உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 16 உறுப்பினர்களின் 13 உறுப்பினர்கள் நேரில் சந்தித்துப் பேசினர்.

நெடுந்தீவுக்கான படகு சேவை தாமதம் காரணமாக மூன்று உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

“தீவுப் பகுதியில் இருந்து உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்களுக்குத் தேநீர் விருந்து ஒன்று தீவுப் பகுதியில் அண்மையில் நடைபெற்றதே தவிர, தீவுப் பகுதி தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.” என இந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

“சபைகளை அமைப்பது தொடர்பாக கட்சியின் தலைமை எடுத்துள்ள முடிவு குறித்து அந்தக் கூட்டத்தில் சாதக, பாதகமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஆனால், தீர்மானம் என்று எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை. அத்தகைய முடிவு எடுக்கப்படக்கூடிய கூட்டமும் அதுவல்ல. அது வெறும் தேநீர் விருந்து பசாரம் மட்டுமே. ஆகவே, கட்சித் தலைமை எடுக்கும் முடிவை மீறாமல் அதையே பின்பற்றுவோம். அது பற்றி எந்த சந்தேகமும் தேவையில்லை.” - என்ற சாரப்பட தீவக உள்ளூராட்சி உறுப்பினர்கள் அங்கு கருத்து தெரிவித்தனர் என அறியவந்தது.

அவர்களின் விளக்கம் கட்சியின் தலைமைக்குத் திருப்தி தந்ததாகவும் தெரியவந்தது.

## கரவெட்டி...

தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் இன்று பிற்பகல் 3 மணியளவில் தவிசாளர் தெரிவுக்கான அமர்வு நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 13 ஆசனங்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு 7 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 4 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு 2 ஆசனங்களும் உள்ளடங்கலாக மொத்தம் 32 ஆசனங்களைக் கொண்ட வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் தெரிவு இரகசியமாகவா அல்லது பகிரங்கமாகவா நடத்தப்பட வேண்டும் என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனப் பெரும்பான்மை வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.



இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தவிசாளருக்காக குமாரசாமி சுரேந்திரனும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் தம்பையா சிவராசாவும் முன்மொழியப்பட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் கு.சுரேந்திரன் 13 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட த.சிவராசா 12 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் 6 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்தனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஓர் உறுப்பினர் வாக்கெடுப்பில் பங்கேற்காது வெளிநடப்புச் செய்தார்.

அதையடுத்து வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ரி.தயாபரன் தெரிவு செய்யப்பட்டார்.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவுடன் கிண்ணியா நகர சபை ஐக்கிய மக்கள் சக்தி வசம்!





(எஸ்.கீதபொன்கலன்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவோடு ஐக்கிய மக்கள் சக்தி வசமானது கிண்ணியா நகர சபை.

கிண்ணியா நகர சபையின் கன்னி அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் தலைமை தாங்கும் அதிகாரியுமான ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இந்த அமர்வு நடைபெற்றது.

இதன்போது கிண்ணியா நகர சபையின் நகர பிதா தெரிவுக்காக இடம்பெற்ற பகிரங்க வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தவிசாளர் வேட்பாளர் எம். எம் மஹ்தி வெற்றி பெற்றார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட கிண்ணியா நகர சபையில் 9 வாக்குகளை எம்.எம். மஹ்தி பெற்றுக் கொண்டதோடு, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நகர பிதாவுக்காகப் போட்டியிட்ட அஷ்ரப் இம்ரான் 2 வாக்குகளையும் பெற்றுக்கொண்டார்.

நகர பிதா தெரிவின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 4 உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஓர் உறுப்பினரும் எம்.எம். மஹ்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் நகர பிதா தெரிவின் போது நடுநிலைமை வகித்தனர்.

துணை நகர பிதாவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ். அப்துல் அசீஸ் போட்டியின்றி ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத கிண்ணியா நகர சபையின் ஆட்சி அதிகாரத்தை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவோடு, ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

15 உறுப்பினர்களைக் கொண்ட கிண்ணியா நகர சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தலா 4 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 3 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், பெற்றுக்கொண்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படை முகாமுக்கான காணி சுவீகரிப்பு இன்று மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவில் கடற்படை முகாமுக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கை இன்று மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சிலாவத்தை பகுதியில் மக்களுக்குச் சொந்தமானதாக அறிவிக்கப்பட்ட இரண்டு ஏக்கர் காணியில் கடற்படையினர் தளம் அமைத்துள்ளார்கள்.

இந்தக் காணி சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணிகளை இன்று மேற்கொள்ள அதிகாரிகள் சென்ற நிலையில் மக்கள் மற்றும் காணியின் உரிமையாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தமையால் காணி அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாழாகும் கல்வி முறைமை

சில விடயங்களைச் செய்வது குற்றமென்றால் சில விடயங்களைச் செய்யாமல் விடுவதும் குற்றம்தான்.

அரசு நிர்வாக விடயங்களுக்கும் இது பொருந்தும்.

நாட்டின் மேன்மைக்காகச் செய்ய வேண்டிய கடப்பாடுகளை நிறைவேற்றாமல் இருப்பதும் நிர்வாக சீர்கேட்டுத் தவறுகளில் முக்கியமானது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்தகைய ஒரு விடயத்தை ஒட்டி கடந்து வந்த அரசுகளின் செயலின்மையை - அதன் பாதிப்புகளை - இலங்கையின் முன்னணி ஆசிரியர் சங்கமான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அம்பலப்படுத்தி இருக்கிறார். இப்போதைய அரசு ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கடந்தும் அதே செயலின்மை பெரும் தவறாக நீடிப்பதை அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இலங்கையில் சீர்கெட்டிருக்கும் கல்வி முறைமையில் பயனுள்ள மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு கடனாக வழங்கிய உதவியை முறையாகப் பயன்படுத்தாமையால், அது நிறுத்தப்படும் ஆபத்து இருப்பதாக அவர் எச்சரித்து இருக்கின்றார்.

"ஆசிய அபிவிருத்தி வங்கி இதுவரை 41 கல்வித் திட்டங்களுக்கு இலங்கைக்கு 1339.17 மில்லியன் டொலர் (ஏறத்தாழ 40 ஆயிரம் கோடி ரூபா) உதவியை வழங்கியுள்ளது. இந்த திட்டங்களில் முக்கிய விடயங்கள் கல்வித் துறையில் செய்யக்கூடிய, இன்றைய கல்வியின் மாற்றத்திற்கு மிகவும் அவசியமான பல அம்சங்கள் இருந்தன." - என்று சுட்டிக்காட்டியுள்ள அவர் அந்த இலக்குகள் அடையப்படவேயில்லை என்பதையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

கல்வித் துறையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் பல வருடங்களாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட உதவிகளில் உருப்படியாக எதுவும் நடக்காத சூழ்நிலையில், கல்வித் துறைக்காக வழங்கும் உதவியை நிறுத்தும் நிலைக்கு இப்போது ஆசிய அபிவிருத்தி வங்கி வந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கிய திட்டங்களில் ஒன்று பாடசாலைகளில் பாடத்திட்டத்தை மாற்றுவது. பாடத்திட்டத்தை மாற்றுவது கல்விக்கு ஒரு முக்கிய காரணியாகும். அதற்கு உதவி வழங்கப்பட்டது.

கல்வி முறையில் பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக மொடியுலர் முறையை செயல்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட உதவி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதையும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் விசனத்துடன் விவரித்திருக்கின்றார்.

இலங்கையில் தற்போதைய பரீட்சை மதிப்பீட்டு முறைமையை மாற்றுவதற்காகவும் உதவிகள் குறிப்பாக வழங்கப்பட்டன.

"நாட்டின் கல்வி முறையை ஏதோ ஒரு வகையில் மேம்படுத்தவும், தேக்கமடைந்த சூழ்நிலையை மாற்றவும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கியிருந்தாலும், அந்த உதவி எதுவும் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. இதுவரை பாடத்திட்டம் மாற்றப்பட்டுள்ளதா? இல்லை. மதிப்பீட்டு முறை மாற்றப்பட்டுள்ளதா? இல்லை. பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக ஒரு மொடியுலர் அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா? இல்லை. எதுவும் செய்யப்படவில்லை. நிதி எடுக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த நிதி எங்கே?" - என்று கேள்வி எழுப்புகின்றார் அவர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனாக பெற்ற இத்துணைப் பெருந்தொகைப் பணம் வீணடிக்கப்பட்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டு ஒரு புறம். அதனால், இது போன்ற உதவித் திட்டங்கள் இனிக் கிடைக்காமல் போகும் சிக்கல் மறுபுறம். அதே சமயம் இத்துணைக் கடனுக்காக தவணைப் பணத்தை மக்களின் வரிப் பணத்தில் இருந்துதான் மீளச் செலுத்த வேண்டி இருக்கின்றது.

இத்தகைய அரசு நிர்வாக சீர்கேடுகளினால் இறுதியாக மாணவர்களின் கல்விதான் பாழாகின்றது. இது தொடர்பில் அரசாங்கம் சரியான விளக்கத்தை மக்களுக்கு முன் வைக்க வேண்டும்





# கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் இரு நூல்கள் வெளியீடு!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் கிண்ணியா எழுத்தாளர் ஏ.எம். கஸ்புள்ளா எழுதிய 'பாரம்பரிய சீனடி தற்காப்புக் கலை' பற்றிய ஒரு நோக்கியல் எனும் ஆய்வு நூல் மற்றும் இலங்கை கல்வியமைச்சால் அங்கீகாரம் பெற்ற 'அணில் சொல்லிய பாடம்' ஆகிய இரு நூல்களின் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கலாநிதியும் ஓய்வு நிலை அதிபருமான எஸ்.ஞானராசா தலைமையில் நடை பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலக கலாசார அதிகார சபை மற்றும் முன்னோடிகள் கலை இலக்கிய வட்டம் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எம்.எஸ். சிராஜுதீன் ஆசிரியர் வரவேற்புரையையும், ஓய்வு பெற்ற அதிபரும் கலாநிதியுமான எஸ்.ஞானராசா தலைமையுரையையும், ஏ.டபிள்யூ.முஹ்சின் நூலின் ஆய்வுரையையும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூலின் முதல் பிரதியை ரயில்வே திணைக்களத்தின் கிழக்கு மாகாண வேலைத்தள மேற்பார்வை ஓய்வு நிலை முகாமையாளர் ஏ.ஏ.மஹரூப்புக்கு வழங்கினர்.

கிழக்கு மாகாண கல்வியமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஸீ.எம். முஸ்இல் ஏனைய பிரமுகர்களுக்கு நூலின் பிரதிகளை இதன்போது வழங்கினார்.

தற்காப்புக் கலையான சீனடியை பயிற்றுவித்த ஏழு அன்னாவிகள் இதன்போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வியமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஸீ.எம்.முஸ்இல் விசேட அதிதியாகவும், சீனடி பயிற்றுவித்த அன்னாவிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 8ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு!







(நூருல் ஹுதா உமர் )

இந்தியாவின் தமிழ்நாடு சேலத்திலுள்ள பெரியார் அரசு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் திணைக்களமும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 8 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு, தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபாவின் நெறிப்படுத்தலில் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் நேற்று (16) இடம்பெற்றது.

“முன்னேற்றம் பெற்றுள்ள இன்றைய டிஜிட்டல் யுகத்தில் தொழில் முனைவோர் செயற்பாடுகள், கலாசாரம், புதுமை, ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலமாக சமூக மாற்றமும் பொருளாதார மேம்பாடும்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற ஆய்வு மாநாட்டில் ஆரம்ப நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ். எம். ஜுனைடீன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்வின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் ஏற்பாட்டுக் குழுவின் செயலாளரும் இந்தியாவின் தமிழ்நாடு சேலத்திலுள்ள பெரியார் அரசு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் திணைக்களத்தின் பேராசிரியருமான கலாநிதி வி.ஆர். பழனிவேலு சிறப்புரையாற்றினார்.

இந்தியாவின் தமிழ்நாடு சேலம், காக்காப்பாளையம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆசோசியேட் பேராசிரியர் கலாநிதி ஆர். றமேஷ், ஆய்வரங்கு தொடர்பான உரையாற்றினார்.

ஆய்வரங்கின் பிரதான உரையை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். ஹிலால் நிகழ்த்தினார். அத்துடன் நன்றியுரை பேராசிரியர் கலாநிதி சல்பியா உம்மாவால் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் பொன்னாடைகள் போர்த்தப்பட்டு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு இந்தியாவில் இருந்து கலாநிதி வி.ஆர். பழனிவேலு, கலாநிதி டி. ஸ்ரீவித்யா, கலாநிதி எஸ். நந்தினி, சேலம் ஜிஹான் டிராவல்ஸின் முகாமைத்துவ பணிப்பாளர் விஷ்ணு மனோஜ், வி.பி. கவுரந்த், பி. கவினா, கே.எஸ். சௌந்தர்யா, எல். மொனிஷா, கலாநிதி ஆர். இரமேஷ், கலாநிதி கே. மணிமேகலை, எஸ்.பி. ஸ்ரீ வித்யா, என்.எஸ். பிரகாஷ், தி. விஜயலட்சுமி பிரகாஷ் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குகொண்டிருந்தனர்.



# டெங்கை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைப்பவனி சாய்ந்தமருதில்!




**(நூருல் ஹுதா உமர், எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

"ஒழிப்போம் ஒழிப்போம் டெங்கை ஒழிப்போம் , இருப்போம் இருப்போம் சுத்தமாக இருப்போம்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது எம்.எஸ் காரியப்பர் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இணைந்து நடத்திய விழிப்புணர்வு நடைப்பவனி நேற்று (16) சாய்ந்தமருது வொலிவேரியன் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிஃப், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. வாசித் அகமத் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த நடைபவனி சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வீதி ஊடாக வொலிவேரியன் பிரதேசத்தைச் சுற்றி மீண்டும் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் பாடசாலையை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.






# திருக்கோவிலில் தந்தையர் தினம்; 65 பேருக்கு ஊன்று கோல்கள்!

( வி.ரி. சகாதேவராஜா)

சர்வதேச தந்தையர் தினத்தை முன்னிட்டு திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் எஸ். வி. ஓ. அமைப்பினர் தந்தையர் தினத்தை அமைப்பின் தலைவர் நந்தபாலு தலைமையில் கொண்டாடினர்.

சமூக தரிசன நிறுவனமும் சக்தி சன சமூக நிலையமும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தின.

இந் நிகழ்வில் திருக்கோவில் காயத்ரி கிராமத்தைச் சேர்ந்த 65 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அழைக்கப்பட்டு அவர்களுக்கு ஊன்று கோல்கள் மற்றும் இனிப்புகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் எஸ். வீ. ஓ. அமைப்பின் பிரதேசத் தலைவர் கே. பத்மநாதன், காயத்ரி கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் எஸ். ஷடாட்சரன், கண. இராஜரத்தினம், எஸ். சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஊன்றுகோல் தேவையான முதியோருக்கு ஊன்று கோல்கள் வழங்கப்பட்டன.





# வடக்கு ஆளுநர் - யாழ். மேயர் சம்பிரதாய பூர்வமாகச் சந்திப்பு!

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாநகர சபையின் மேயராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி மதிவதனி விவேகானந்தராஜா ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை (16) சம்பிரதாய பூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். மாநகர சபையின் பல்வேறு தேவைகள் தொடர்பில் அவர் ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைத்தார். அத்துடன் யாழ்ப்பாண நகர



அபிவிருத்தி தொடர்பாக எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றவேண்டும் என்று ஆளுநர் இதன்போது கேட்டுக்கொண்டார்.





# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்ப கொள்கை ஆவண வரைவு

## வடக்கு மாகாண ஆளுநருடன் இது தொடர்பில் கலந்தாய்வு

இந்தியாவின் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவதற்கு ஏதுவான பொறிமுறையை உருவாக்கும் வகையிலான கொள்கை ஆவண வரைவு தயாரிக்கப்பட்டு அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடன், இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனம் (ஒஃபர் சிலோன்) மற்றும் ‘அக்டட்’ நிறுவன உத்தியோகத்தர்கள் ஆளுநர் செயலகத்தில் இன்று திங்கட்கிழமை கலந்துரையாடல் நடத்தினர்.

இந்த ஆண்டு தமிழகத்திலுள்ள 290 குடும்பங்கள் இலங்கைக்கு மீள்வர விருப்பம் தெரிவிக்கப்பட்ட நிலையில், அதற்கான ஏது நிலைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

ஆனால், அண்மைக் காலத்தில் இடம்பெற்ற சில எதிர்பாரத சம்பவங்களால் இது சவாலாக அமையும் என்றும் இது தொடர்பில் இலங்கை அரசு மிகப் பொறுப்புடன் கையாண்டமை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மீள் குடியேற்ற ஒழுங்குமுறை தொடர்பாக விசேட அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டிய முக்கியத்துவம் கலந்துரையாடப்பட்டது.

இதற்காக ஒஃபர் சிலோன் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமும் மாகாண மட்ட கலந்துரையாடலில் பெறப்பட்ட விடயங்கள் தொடர்பான ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டு ஓர் ஆவணமாகத் தயாரிக்கப்பட்டு அரச உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துக்கள் பெறப்பட்டு உரிய முறையில் அமைச்சரவைக்கு ஊடாக ஜனாதிபதியின் பார்வைக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து மீள் திரும்பும் மக்களுக்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் அரசின் சகல நிலை அதிகாரிகளையும் உள்ளடக்கி மக்களின் தேவைகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன், மாகாணமட்ட உயர் அதிகாரிகளை தமிழ் நாட்டிலுள்ள முகாம்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக அவதானிப்புக்களை மேற்கொள்வதுடன் அவர்கள் இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்ப்பவை தொடர்பாகவும் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கும் எனவும் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

மீள்குடியேறும் மக்களுக்கான வீட்டுத்திட்டம், வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான விசேட தேவைகளை எவ்வாறு விரைவாகப் பெற்றுக் கொடுக்கலாம் என்பதையும் நிலைத்த மீள்குடியேற்றம் மற்றும் சமாதானத்தையும் கட்டி எழுப்புதலின் அவசியம் தொடர்பாக அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டிய தேவைகளை தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.





# இனங்களுக்கு இடையே சகவாழ்வை கட்டியெழுப்பும் செயற்றிட்டம் மன்னாரில்

( வாஸ் கூஞ்ஞ)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் ஏற்பாட்டில் இனங்களுக்கிடையே சக வாழ்வை கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக இந்து மதத்தலைவரை சந்திக்கும் நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மன்னார் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அஸீம் (அத்லி) தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இந்த நிகழ்வு இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் மகா தர்மகுமார குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலய பிரதமகுரு கருணானந்த குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலய தலைவர் பொறியியலாளர் இராமகிருஸ்ணன் ஆகியோர்களுக்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் இடையில் சிநேக பூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது மன்னார் நகரத்துக்குள் இன நல்லுறவை மேம்படுத்தல் சம்பந்தமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவால் வெளியிடப்பட்ட நூற்றாண்டு நினைவு மலர் கையளிக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் ஏற்பாட்டில் இனங்களுக்கிடையே சகவாழ்வை கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தின் முதலாம் கட்ட நிகழ்வு அண்மையில் தோட்டவெளியில் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் தலைமையில் கத்தோலிக்க குழுக்களுக்கிடையே நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்ட செயலகத்தில் உள்ளக அலுவல்கள் பிரிவு திறப்பு

(ஹஸ்பர் ஏ.எச்., எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் "உள்ளக அலுவல்கள் பிரிவு" நேற்று (16) உத்தியோக பூர்வமாக மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமாரவால் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவின் எண்ணக் கருவுக்கு அமைய, லஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக ஒழிக்கும் செயற்றிட்டமான இலங்கையின் ஊழலை ஒழிக்கும் செயற்பாடு திட்டத்தை மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டமாகப் பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை முறையிடுவதற்கு இந்தப் பிரிவானது திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.







# மட்டக்களப்பு கடல் நாச்சியம்மன் ஆலயத்தின் ஒரு நாள் திருச்சடங்கு

(வாலகிருஸ்ணா)

இலங்கையின் முதல் கடல் நாச்சியம்மன் ஆலயம் என்ற பெருமையைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு பெரிய கல்லாறு அருள்மிகு ஸ்ரீ கடல்நாச்சியம்மன் ஆலயத்தின் ஒரு நாள் திருச்சடங்க இன்று அதிகாலை செவ்வாய்க்கு ஆடுதலுடன் நிறைவுபெற்றது.

பல நூற்றாண்டு பழமையான குறித்த ஆலயமானது கிழக்கிலங்கையின் தனித்துவமிக்க பாரம்பரிய சடங்கு முறைகளைக் கொண்டதாக ஒரு நாள் திருச்சடங்காகவும் நடைபெற்று வருகின்றது.

ஆலயத்தின் ஒரு நாள் திருச்சடங்கை முன்னிட்டு ஆயிரக் கணக்கான பக்தர்கள் புடைசூழ பண்டைய கால முறைகளுக்கு அமைவாக பறவைக்காவடிகள் மற்றும் காவடிகள் சகிதம் ஆயிரக் கணக்கான பெண்கள் கற்பூரச்சட்டி ஏந்தி வர பெரியகல்லாறு ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்து அம்மன் கொண்டுவரும் நிகழ்வு நடைபெற்றது.

ஆலயத்தை அம்மன் ஊர்வலம் வந்தடைந்ததும் ஆலய திருச்சடங்கின் திருக்கதவு திறக்கப்பட்டு விசேட பூஜைகள் நடைபெற்றன.



# நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறிகளின் விலைகள்!

(மஸ்கெலியா )

மத்திய மலை நாட்டில், நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்த காணப்படுகின்றன.

முருங்கைக்காய் ஒரு கிலோ 1000 ரூபா முதல் 1200 ரூபா வரையும், கரட் ஒரு கிலோ 700 ரூபா முதல் 800 ரூபா வரையும், போஞ்சி ஒரு கிலோ 600 ரூபா முதல் 650 ரூபா வரையும் –

மிளகாய் ஒரு கிலோ 800 ரூபா முதல் 900 ரூபா வரையும் பாகற்



காய் ஒரு கிலோ 400 ரூபா முதல் 450 ரூபா வரையும், பூசணி ஒரு கிலோ 300 ரூபா முதல் 320 ரூபா வரையும் கத்தரிக்காய் ஒரு கிலோ 650 ரூபா முதல் 700 ரூபாவரையும், பயிற்றங்காய் ஒரு கிலோ 480 ரூபா முதல் 500 ரூபா வரை, லீக்ஸ் ஒரு கிலோ 450 ரூபா முதல் 500 ரூபா வரையும், புடோல் ஒரு கிலோ 400 ரூபா முதல் 450 ரூபா வரையும், பீர்க்கங்காய் ஒரு கிலோ 500 ரூபா முதல் 520 ரூபா வரையும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

# அணு ஆயுத தயாரிப்பை அதிகரிக்கிறது இந்தியா

இந்தியா அணு ஆயுத கையிருப்பை கணிசமாக விரிவுபடுத்தி உள்ளது. இதன்மூலம் பாகிஸ்தான் உடனான இடைவெளி விரிவடைந்துள்ளது.

இதுதொடர்பில் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் (எஸ்.ஐ.பி.ஆர்.ஐ) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அணு ஆயுத கையிருப்பை இந்தியா தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 2024 ஆம் ஆண்டில் இந்தியாவிடம் 172 அணு ஆயுதங்கள் இருந்த நிலையில் இந்த ஆண்டு இது 180 ஆக அதிகரிக்கும். மேலும் மேம்பட்ட அணுசக்தி விநியோக அமைப்புகளை உருவாக்குவதிலும் இந்தியா குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.

மேலும் புது வகையான அணுசக்தி விநியோக அமைப்புகளையும் தொடர்ந்து இந்தியா உருவாக்கி உள்ளது. இதன்மூலம் அணு ஆயுத திறனில் பாகிஸ்தானுடன் ஒப்பிடும்போது இந்தியா தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. பாகிஸ்தானிடம் தற்போது 170 அணு ஆயுதங்கள் உள்ளன. சீனாவிடம் 600 ஆயுதங்கள் உள்ளன. சீனா 2023 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 100 அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது.



அணு ஆயுத திறன் கொண்ட இந்தியா, பாகிஸ்தான் இடையே சமீபத்தில் சண்டை நடைபெற்றது. இதுபோன்ற சூழலில் இரு பக்கத்து நாடுகளும் அணு ஆயுதங்களை அதிகரித்து வருவது உலக நாடுகளை கவலை அடையச் செய்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய 9 நாடுகளிடம் அணு ஆயுதங்கள் உள்ளன. இந்த 9 நாடுகளும் அணு ஆயுதங்களை அதிகரிக்கவும் புதிய தொழில் நுட்பங்களை புகுத்தவும் தொடர்ந்து அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றன," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 50 வீத டிஜிட்டல் பரிவர்த்தனை இந்தியாவில் நடைபெறுகிறது

## மோடி பெருமிதம்



உலகின் 50 வீத டிஜிட்டல் பரிவர்த்தனைகள் இந்தியாவில் யு.பி.ஐ. மூலம் நடைபெறுவதாக பிரதமர் நரேந்திர மோடி சைப்ரஸில் நடைபெற்ற கூட்டத்தில் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

இந்தியா-சைப்ரஸ் சி.இ.ஓ. அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் மோடி இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவில் ஜி.எஸ்.டி, கார்ப்பரேட் வரி மற்றும் பல ஆயிரம் சட்டங்களை குற்றமற்றதாக்குதல் மூலம் வரி சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசு தெளிவான மற்றும் நிலையான கொள்கைகளை உறுதிப்படுத்தியுள்ளது. அதைத்தவிர, வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கு தேவையான முதன்மையான முக்கியத்துவத்தையும் அரசு அளித்துள்ளது.

இந்தியா இன்று உலகளவில் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளது. மூன்றாவது பெரிய பொருளாதாரத்தை நோக்கிய இந்தியா தற்போது வேகமாக முன்னேறி வருகிறது. இது விரைவில் நிறைவேறும். உலகின் 50 வீத டிஜிட்டல் பரிவர்த்தனைகள் இந்தியாவில் யுபிஐ மூலமாக நடைபெறுகிறது.

இது இந்தியாவில் ஏற்பட்டுள்ள டிஜிட்டல் புரட்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நிதி ஒருங்கிணைப்பு சேவைகளை மேம்படுத்துவதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் மிகப்பெரிய வாய்ப்பினை வழங்கியுள்ளது. இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் சைப்ரஸ் வருவது இதுவே முதல் முறை. அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சி." என்று தெரிவித்துள்ளார்.

# மொடல் அழகி சடலமாக மீட்பு

ஹரியானாவில் கடந்த 14 ஆம் திகதி முதல் காணாமல்போன மொடல் அழகி ஷீத்தல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஹரியானா நாட்டுப்புற இசைத் துறையுடன் தொடர்புடைய மொடல் அழகி ஷீத்தல் என்கிற சிம்மி சவுத்ரி (வயது 23). இவரை கடந்த 14 ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரது சகோதரி நேகா கடந்த ஞாயிற்றுக்கிழமை பானிபட் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அப்போது நேகா, "14 ஆம் திகதி இரவு ஷீத்தல் என்னை தொலைபேசியில் அழைத்து, பானிபட்டை சேர்ந்த



சுனில் என்ற முன்னாள் நண்பர் படப்பிடிப்பு தளத்தில் வந்து தன்னை தாக்கியதாக கூறினாள்." என்றார்.

இந்நிலையில் சோனிபட் நகரின் கார்கவுடா பகுதி கால்வாய் ஒன்றில் ஷீத்தல் கழுத்து அறுக்கப்பட்டு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஹரியானா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கால்வாயில் பெண் ஒருவரின் சடலம் கிடப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. சடலத்தை கைப்பற்றி விசாரணை நடத்தினோம். இதில் காணாமல்போன ஷீத்தலின் உடல் அது எனத் தெரியவந்தது. இந்த வழக்கில் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம்." என்று கூறப்பட்டுள்ளது.

# உடனடி போர் நிறுத்தம் வேண்டும் மத்திய கிழக்கிடம் ஈரான் கோரிக்கை

உடனடி போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில், இஸ்ரேல் மீது தனது செல்வாக்கைப் பயன்படுத்த, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு அழுத்தம் கொடுக்குமாறு, மத்திய கிழக்கு நாடுகளிடம் ஈரான் கோரியுள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட்டால், அணு சக்தி பேச்சுவார்த்தைகளில் நெகிழ்வுத்தன்மையுடன் ஈடுபடத் தயாராக உள்ளதாகவும் ஈரான் அந்த நாடுகளிடம் தெரிவித்துள்ளது.



கட்டார், சவூதி அரேபியா மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிடம், தெஹ்ரான் இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வளைகுடாத் தலைவர்களும், அவர்களின் உயர்மட்ட இராஜதந்திரிகளும், கடந்த வார இறுதி முழுவதும் தொலைபேசிகளில் தொடர்பு கொண்டு, ஈரான் - இஸ்ரேல் மோதல் விரிவடைவதைத் தவிர்க்க முயற்சித்தனர்.

இந்த நிலையில், மோதல் கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் என வளைகுடா நாடுகள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன.

இதேவேளை, வெள்ளை மாளிகை மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை, ஈரானின் இந்தக் கோரிக்கை குறித்து இதுவரை பதிலளிக்கவில்லை.

# இந்திய மாணவர்கள் வெளியேற ஈரான் தரைவழி எல்லை திறப்பு

இந்தியாவின் கோரிக்கையை ஏற்று அங்கு வசிக்கும் இந்திய மாணவர்கள் வெளியேற தரைவழி எல்லைகளை ஈரான் அரசு திறந்துள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், ஈரானில் தற்போது 4,000 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் மாணவர்கள். ஈரானில் உள்ள பெரும்பாலான இந்திய மாணவர்கள் ஜம்மு-காஷ்மீரை சேர்ந்தவர்கள்.

இந்நிலையில் ஈரானில் படிக்கும் மாணவர்களை பாதுகாப்பாக வெளியேற்ற உதவுமாறு ஈரான் அரசை, இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில், இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தங்களது தரைவழி எல்லைகளை திறந்துள்ளதாகவும், அதன் வழியாக மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேறலாம் என்றும் ஈரான் அரசு நேற்று அறிவித்துள்ளது.

ஈரான் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

“ஈரான் மீதான வான்வழி மூடப்பட்டிருந்தாலும், பொதுமக்கள் பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேறும் வகையில் அனைத்து தரைவழி எல்லைகளும் திறந்திருக்கும். மாணவர்கள் பாதுகாப்பாக செல்லலாம்.” என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், அங்குள்ள இந்தியர்களை ஈரானுக்குள்ளேயே பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணிகளை இந்திய தூதரகம் தொடங்கியுள்ளது.

மேலும், விரைவில் அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அழைத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

# பாதாள அறையில் தஞ்சமடைந்தார் ஈரான் மதத் தலைவர் கொமேனி

இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில் ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கொமெனி (வயது 86) குடும்பத்துடன் பாதாள அறையில் தஞ்சமடைந்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி ஈரானின் பல்வேறு பகுதிகள் மீது இஸ்ரேல் விமானப் படை திடீர் தாக்குதலை நடத்தியது. இதில் ஈரானின் 4 அணு சக்தி தளங்கள் அழிக்கப்பட்டன. அந்த நாட்டின் 14 அணு சக்தி விஞ்ஞானிகள், 3 இராணுவ தளபதிகள் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல், ஈரான் இடையே போர் தீவிரமடைந்து வருகிறது. நான்காவது நாளாக நேற்றும் போர் நீடித்தது.

ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது இஸ்ரேல் ராணுவம் நேற்று ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் உளவுத் துறை தலைவர் முகமது கசாமி நேற்று கொல்லப்பட்டார். தெஹ்ரானில் உள்ள ஈரான் பாதுகாப்புத் துறை தலைமை அலுவலகம், வெளியுறவுத் துறை அலுவலகம் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் இரு அலுவலகங்களும் தரைமட்டமாகின.



ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கொமேனி, தலைநகர் தெஹ்ரானின் வடகிழக்கில் லாவிஜான் பகுதியில் உள்ள பாதாள அறையில் குடும்பத்துடன் தஞ்சமடைந்து உள்ளார்.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் குறிப்பிடுகையில்,

“கடந்த 13 ஆம் திகதி ஈரான் மீது தாக்குதல் நடத்தினோம். அன்றைய தினமே அயத்துல்லா அலி கொமேனி மீதும் தாக்குதல் நடத்தியிருக்க முடியும். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. அவருக்கு ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கிறோம்.

ஈரானின் அணு ஆயுத திட்டத்தை அவர் முழுமையாக கைவிட வேண்டும். இல்லையெனில் அணு ஆயுத திட்டத்துக்கான கட்டமைப்புகளை இஸ்ரேல் முழுமையாக அழிக்கும். அயத்துல்லா அலி கொமேனி பாதாள அறையில் பதுங்கியிருந்தாலும் எங்களால் தாக்குதல் நடத்த முடியும்.” என்று தெரிவித்துள்ளன.

சர்வதேச பாதுகாப்புத் துறை நிபுணர்கள் கருத்து தெரிவிக்கையில்,

“கடந்த 1979 ஆம் ஆண்டில் ஈரானில் புரட்சி ஏற்பட்டது. அப்போது மன்னராட்சி அகற்றப்பட்டது. இதன் பிறகு ஷியா பிரிவு மதத் தலைவர்களே ஈரானை ஆட்சி செய்து வருகின்றனர். அந்த நாட்டின் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன், பெயரளவுக்கு மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார்.

தற்போதைய ஷியா மதத் தலைவர் அயத்துல்லா அலி கொமேனியே ஈரானை திரைமறைவில் ஆட்சி செய்து வருகிறார். அவரை அகற்றிவிட்டு, ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இஸ்ரேல் வியூகம் வகுத்து உள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகள், லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகள், ஏமனை சேர்ந்த ஹவுத்தி தீவிரவாதிகளுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் இந்த 3 தீவிரவாத அமைப்புகளும் வலு விழந்துவிடும். எனவே ஈரானுக்கு எதிரான போரை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தி வருகிறது. ” என்று தெரிவித்தனர்.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 17/06/2025

## ஜப்பானிய பிரதமர் கனடாவிற்கு விஜயம்

ஜப்பானிய பிரதமர் ஷிகெரு இஷிபா கனடாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஜி 7 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் கனடா விற்குச் சென்றுள்ளார் 02




# பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 18 பேர் கைது

**கனடாவில் பாரிய குற்றச் செயல்களு டன் தொடர்புடைய 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**பெரிய அளவிலான காப்புறுதி மோச டியும், வன்முறை மிரட்டல்களும் மேற் கொண்ட குற்றவாளிகள் குழுவொன்று அடையாளம் காணப்பட்டு தற் போது முழுமையாக ஒடுக்கப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.**

**இந்த விசாரணை 'ப்ராஜெக்ட் அவுட் ஸோர்ஸ்' எனப் பெயரிடப்பட்டிருந்தது. பீல் பகுதியில் திங்கள் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர் பான விரிவான தகவல்கள் வெளியிடப் பட்டன.**

2023ஆம் ஆண்டு தெற்காசிய வணிக சமூகம் மீது அதிகரித்த வன்முறை மிரட்டல்களுக்கு பதிலளிக்கவே இந்த விசாரணை கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதாக பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிஷான் துரையப்பா கூறியுள்ளார்.

இந்த மிரட்டல்கள், சுடுதல், தீவைத்தல், மற்றும் பல வன்முறைகள் ளாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

விசாரணை அதிகாரி பிரையன் லொரெட் தலைமையில் நடைபெற்ற இந்த விசாரணையின் போது, பெரும் பாலான குற்றங்களில் பிராம்ப்டனில் செயல்பட்டு வந்த குழு தொடர்புடையது என தெரியவந்துள்ளது.

இந்த குழு ரொறன்ரோ பெரும்பாக GTA (Greater Toronto Area) பகுதியில் பல புலனாய்வு விபத்துக்களை திட்டமிட்டு ஏற்படுத்தி, காப்புறுதி நிறுவனங்களை ஏமாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்துகள் முற்றிலும் திட்டமிட்ட மோசடி எனவும் இது பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆபத்தானது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# 76 வயதில் பட்டப்படிப்பை நிறைவு செய்த கனேடியர்

கனேடியர் ஒருவர் தனது 76ஆவது வயதில் பட்டப்படிப்பொன்றை முடித்துள்ள நிலையில், அடுத்த பட்டத்தைப் பெறும் முயற்சியையும் துவக்கியுள்ளார்.

டேவிட் ஜாக்சன் என்னும் கனேடியர், தனது 76 ஆவது வயதில் Mount Royal பல்கலையில் வரலாற்றில் இளங்கலை பட்டப்படிப்பை 02




# கனடா சென்றடைந்தார் பிரதமர் நரேந்திர மோடி

பிரதமர் நரேந்திர மோடி சைப்ரஸ் பயணத்தை நிறைவு செய்த பின்னர் இன்று கனடா சென்றடைந்தார். கனடாவில் நடைபெறும் ஜி-7 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

சைப்ரஸ், கனடா, குரோஷியா ஆகிய மூன்று நாடுகளுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார்.

சைப்ரஸ் சென்ற பிரதமர் மோடி, அந்த நாட்டின் ஜனாதிபதி நிகோஸ் கிறிஸ்டோடுலிடிஸ் உடன் பேச்சு வார்த்தை நடத்தினார். ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் மோடிக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

கனடாவில் உள்ள கனனாஸ்கிஸில் ஜி7 உச்சி மாநாடு நடைபெறுகிறது. ஜி7 உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி, தொடர்ச்சியாக 6 ஆவது முறையாக பங்கேற்கிறார்.

இந்த உச்சிமாநாட்டில், எரிசக்திப் பாதுகாப்பு, தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள் உள்ளிட்டவை குறித்தும் முக்கியமான உலகளாவிய விவகாரங்கள் குறித்தும், செயற்கை நுண்ணறிவு, போக்குவரத்து இணைப்பு, குவாண்டம் தொழில்நுட்பம் தொடர்பாகவும் விவாதிக்கப்படும்.

ஜி7 நாடுகளின் தலைவர்கள், அழைக்கப்பட்ட பிற நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோருடனும் பிரதமர் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வார். உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, பிரதமர் பல இருதரப்பு சந்திப்புகளையும் நடத்துவார்.

இதன் பின்னர் குரோஷியாவுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்கிறார். குரோஷியா பிரதமர் ஆண்ட்ரேஜ் பிளென்கோவிச்சின் அழைப்பின் பேரில், ஜூன் 18 அன்று குரோஷியாவிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்வார் பிரதமர் மோடி. இந்தியப் பிரதமர் ஒருவர் குரோஷியாவிற்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். இருதரப்பு உறவில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிப்பதாக இது அமைந்துள்ளது.




## ஜப்பானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மத்திய கிழக்கு மற்றும் உக்ரைனின் நிலைமை, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில், ஜப்பானிய பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்திக்க உள்ளார் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## 76 வயதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடித்துள்ளார்.

1975ஆம் ஆண்டு, ஏற்கனவே கணிதத்தில் பட்டம் பெற்றவர் டேவிட். பிறகு பல இடங்களில் வேலை செய்த டேவிடுக்கு கல்வியின் மீதான ஆர்வம் மட்டும் குறையவேயில்லை.

Dr. Scott Murray என்னும் வரலாற்றுத் துறை பேராசிரியரின் பயிற்றுவிப்பு முறையால் ஈர்க்கப்பட்ட டேவிட், 2007ஆம் ஆண்டு பகுதி நேரக் கல்லூரிப் படிப்பில் இணைந்தார்.

இளைஞர்களுக்கு இணையாக வகுப்பில் ஆர்வம் காட்டுபவர் என ஆசிரியர்களாலும் சக மாணவர்களாலும் பாராட்டப்படும் டேவிட், சமீபத்தில் தனது பட்டப்படிப்பை முடித்தார்.

அடுத்தபடியாக, 2033 இல் ஒரு பட்டம் பெறும் வகையில், மீண்டும் பகுதி நேரக் கல்லூரிப்படிப்பை டேவிட் துவங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# பிரதமர் மோடியின் கனடா பயணத்தை சீக்கிய அமைப்புகள் எதிர்ப்பது ஏன்?

கனடா பிரதமர் மார்க் கார்னியிடமிருந்து ஜி7 உச்சிமாநாட்டிற்கான அழைப்பு வந்த ஒரு வாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி கனடாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பிரதமர் மோடி கனடா புறப்பட்டுச் செல்வதற்கு முன்னரே, சில சீக்கிய பிரிவினைவாத அமைப்புகள் அவருக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றன. கனடா வரக் கோரி பிரதமர் மோதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டதை எதிர்த்து அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

முன்னதாக, சனிக்கிழமையன்று ஒட்டாவாவில் சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த சிலர் நாடாளுமன்றத்தின் முன் போராட்டம் நடத்தினர்.

ஆனால், இந்தியப் பிரதமரின் இந்தப் பயணம் இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் நிபுணர்கள் நம்புகின்றனர்.

2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு, பிரதமர் மோடி தற்போதுதான் கனடாவுக்கு செல்கிறார். இது மார்க் கார்னிக்கும் மோடிக்கும் ஒரு ராஜ்ஜீய ரீதியிலான சோதனையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

பிரதமரின் 2015 ஆம் ஆண்டு பயணத்திற்கும் தற்போதைய பயணத்திற்கும் இடையிலான இந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில், காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கனடாவில் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையில், இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக அன்றைய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதன் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்தன.

இப்போது ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராக இல்லையென்றாலும், ட்ரூடோவின் கட்சி ஆட்சியில் உள்ளது. இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, மார்க் கார்னி கனடாவின் பிரதமராக பதவியேற்று உள்ளார்

ஜி7 மாநாட்டில் கலந்துக் கொள்ள பிரதமர் மோடிக்கு அழைப்பு அனுப்பப்பட்டதை அடுத்து கனடாவின் சில சீக்கிய அமைப்புகள் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றன.

ஒட்டாவா சிட்டிசன் என்ற உள்ளூர் ஊடகத்தின்படி, சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றம் அமைந்திருக்கும் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் பலர் காலிஸ்தான் ஆதரவுக் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

கடந்த வாரம், இந்த சீக்கிய அமைப்புகள், பிரதமர் மோதிக்கு வழங்கப்பட்ட ஜி7 அழைப்பை திரும்பப் பெறுமாறு பிரதமர் மார்க் கார்னியிடம் முறையிட்டன.

ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலை வழக்கு தொடர்பான விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்றும், கனடா விவகாரங்களில் தலையிடுவதையும், கனடாவில் உள்ள சீக்கியர்களை குறிவைப்பதையும் நிறுத்துவதாக இந்தியா உறுதியளிக்காவிட்டால், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு விடுக்கப்பட்ட அழைப்பை திரும்பப் பெற வேண்டும் என்று 'உலக சீக்கிய அமைப்பு கனடா' மற்றும் 'சீக்கிய கூட்டமைப்பு கனடா' போன்ற குழுக்களின் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

இருப்பினும், இதுபோன்ற குற்றச்சாட்டுகளை இந்திய அரசாங்கம் தொடர்ந்து மறுத்து வருகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் திகதி கனடாவில் சீக்கிய பிரிவினைவாதத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலையில் இந்திய அரசுக்கு பங்கிருப்பதாக கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியபோது, இந்தியாவுடனான கனடாவின் உறவுகளில் சுணக்கம் ஏற்பட்டது.

நிஜ்ஜரின் கொலையில் இந்தியாவுக்குத் தொடர்பு இல்லை என்று இந்திய அரசு தொடர்ந்து மறுத்துவருகிறது.

சீக்கிய பிரிவினைவாதிகளுக்கு கனடா பாதுகாப்பான புகலிடமாக இருப்பதாகவும் இந்தியா குற்றம் சாட்டி வருகிறது. ஹர்தீப் சிங் நிஜ்ஜரை 2020 ஆம் ஆண்டு இந்தியா 'பயங்கரவாதி' என்று அறிவித்தது.

பிரதமர் மோடிக்கு விடுக்கப்பட்ட அழைப்பில் சில நிபந்தனைகள் இருக்க வேண்டும் என்று 'சீக்கிய கூட்டமைப்பு கனடா' அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மொனிந்தர் சிங் கூறினார் என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

"இதுவரை வெளிச்சத்திற்கு வந்தவற்றிற்கு அவரும் அவரது அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டுமா என்ற நிபந்தனையின் பேரிலேயே அவருடனான எந்தவொரு சந்திப்பும் இருக்க வேண்டும், ஆனால் அது போன்ற எந்தவொரு நிலைப்பாடும் இன்னும் எடுக்கப்படவில்லை" என்று அவர் கூறுகிறார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயில் உள்ள குருத்வாராவின் உறுப்பினர்கள், எதிர்வரும் ஜி7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட அழைப்பை ரத்து செய்யுமாறு பிரதமர் கார்னிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இந்திய பிரதமருக்கு விடுக்கப்பட்ட அழைப்பால், தாங்கள் ஏமாற்றமடைந்ததாக 2023 ஆம் ஆண்டு ஹர்தீப் சிங் நிஜ்ஜர் படுகொலை செய்யப்பட்ட குருநானக் சீக்கிய குருத்வாராவை சேர்ந்தவர்கள் கவலை தெரிவித்தனர்.

"இந்த ராஜ்ஜீய நடவடிக்கையை சீக்கிய சமூகம் கனடாவின் நீதி, சிவில் பாதுகாப்பு மற்றும் தேசிய இறையாண்மைக்கான உறுதிப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகக் கருதுகிறது. இது, வன்முறை மற்றும் வெளிநாட்டு தலையீட்டை சகித்துக்கொள்ளும் அரசின் போக்கைக் குறிக்கிறது" என்று அவர்கள் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.